தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# நாட்டார் வழக்காற்றியலில் சிறுதெய்வ வழிபாடுகள்

**செ.ராஜேஸ்வரி,**
**ஆய்வு மாணவர், தமிழ்த்துறை,**
**தியாகராசர் கல்லூரி, மதுரை**

ஆய்வுச்சுருக்கம்

பரந்துபட்ட உலகில் உயிரினங்களில் முதன்மைப்படுத்தப்பட்டு,நாகரீக வளர்ச்சியால் நவநாகரீக மனிதனாக மாறியிருந்தும் கூட,மனித வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் நிகழ்வுகளுக்கும் அவனால் காணமுடியாத ஆனால் உணர முடிந்த ஏதோ ஒரு சக்தி காரணமாய் அமைகின்றது.அந்த சக்தியை இயற்கையாகவும்,கடவுளாகவும் கருதுகின்ற நம்பிக்கைகள் மக்களிடையே நிலவுகின்றன. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தீமை அகன்று,நன்மை நிலையாய் நின்றிட மக்களால் கடைபிடிக்கப்பட்ட வழிபாடே தெய்வவழிபாடாகும்.இத்தெய்வவழிபாடு சிறுதெய்வ வழிபாடு,பெருந்தெய்வவழிபாடு என்று இருமுறைகளில் நடத்தப்படுகின்றது.நாட்டார்வழக்காற்றியல் வழிநின்று இத்தெய்வ வழிபாடுகளை ஆய்வதே இவ்வாய்வுக்கட்டுரை ஆகும்.

முன்னுரை

மனிதன் பல்வேறு விதமான அச்சத்தின் காரணமாக தெய்வவழிபாட்டைத் துவங்கினான்.பின்னாளில் அவை,நாளடைவில் வழிபாட்டு முறைகள்,சடங்குகள் என அனைத்தையும் கடைபிடிக்கத் துவங்கினான்.ஐந்திணைகளுக்கும் தெய்வங்கள் இருப்பதாக உணர்த்தும் சங்க இலக்கிய நூல்கள் வழி,தெய்வவழிபாடுகள் சங்ககாலத்திலிருந்தே வழக்கிலுள்ளமையை அறிய முடிகின்றது.சிறுதெய்வ,பெருந்தெய்வ வழிபாடுகள் குறித்து நாட்டார்வழக்காற்றுப் பாடல்களும் கதைகளும் பெரிதும் எடுத்துக்காட்டியுள்ளன. அவ்வகையில்

நாட்டார்வழக்காற்றியலில் சிறுதெய்வ வழிபாடுகள் என்பது இவ்வாய்வுத்தளமாக அமைகிறது.

வழிபாடு

“வழிபடு என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல்.வழிபடு என்பதற்கு வணங்குதல்,வழியில் செல்லுதல்,பின்பற்றுதல்,நெறிப்படுத்துதல்,பூசனை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன”.என்கிறார் முனைவர் ஓ.முத்தையா.அவ்வகையில் சிறுதெய்வ வழிபாடுகள் குறித்து எண்ணற்ற ஆய்வாளர்கள் பேசியுள்ளனர்.

சிறுதெய்வ வழிபாடு

நாட்டுப்புற மக்கள் வழிபடும் தெய்வங்களை சிறுதெய்வங்கள் என்பர்.இவர்களின் வழிபாடு சிறுதெய்வ வழிபாடு எனப்படும். இச்சிறுதெய்வ வழிபாட்டில் தெய்வங்களை அலங்கரித்தல்,பூசை செய்தல், படையல் போடுதல் , நேர்த்திக்கடன் செலுத்துதல், ஆடிப்பாடித் துதித்தல் போன்ற முறைகள் பின்பற்றப்படுகின்றன. பெரும்பாலும் மக்களிடையே ஒருவராக வாழ்ந்து மறைந்தவர்களே பின்னாளில் சிறுதெய்வங்களாகவே மாற்றப்பட்டுள்ளன.இத்தெய்வ வழிபாட்டில், வீட்டுத்தெய்வ வழிபாடு,குலதெய்வ வழிபாடு,இனத்தெய்வ வழிபாடு,ஊர்த்தெய்வ வழிபாடு எனப் பல வகை வழிபாடுகள் உள்ளன.மக்களிடையே வாழ்ந்து மறைந்த முன்னோரை வணங்கும் காரணத்தினால் இத்தகைய வழிபாடுகளுக்கென்று பொதுவான இலக்கணங்களோ,வரையறைகளோ இல்லை.மக்கள் தங்களது விருப்பத்திற்கேற்றவாறு வழிபாடு செய்கின்றனர்.

அத்தகைய வழிபாடுகள் அதிகம் நடைபெறும் பகுதிதான் மதுரை மாவட்டம் மேலூரை அடுத்த கருங்காலக்குடி.இவ்வூரில் சமணர் படுகைகள் மற்றும் கல்வெட்டுகள் மட்டுமல்ல,சிறுதெய்வ வழிபாடுகளும் பிரசித்தி பெற்றவை.

சிறுதெய்வங்களும் வழிபாட்டுமுறைகளும்

மதுரை மாவட்டத்தில் உள்ள கருங்காலக்குடியில் சந்தி வீரன் என்னும் பெயருடைய கடவுளை ஊர்தெய்வமாகக் கொண்டு மக்கள் வழிபடுகின்றனர். இந்த சந்தி வீரனுக்கு மக்கள் பூசனை செய்வது,திருவிழா நடத்துவது எனத் தங்களுக்கே உரித்தான பாணியில் வழிபாடுகளை நடத்துகின்றனர். இவற்றில் குறிப்பிடத்தகுந்தது பாரிவேட்டையாகும். ஊர்த்தெய்வங்களுக்குத் திருவிழா கொண்டாடும்பொழுது சிவராத்திரியன்று பாரிவேட்டை செல்லுவது வழக்கம். பாரிவேட்டை என்பது

முயல்வேட்டையாகும். தங்கள் கிராமத்திலிருந்து வெகுதூரம் சென்று முயல்களைத் தேடிப்பிடித்து, வேட்டையாடி, அவற்றை சமைத்துக் கடவுளுக்குப் படையல் போடுவர். பின்னர்,ஊரின் ஒவ்வொரு வீட்டிற்கும் சமைக்கப்படாத ஊண் வழங்கப்படும். அதனை மக்கள் கடவுளின் அருளாக எண்ணி உண்பர். சந்தி வீரனின் படையல் உண்போருக்கு தீமை விலகும் என்பது மக்கள் நம்பிக்கை.

மலையாண்டி

கருங்காலக்குடியை அடுத்துள்ள குன்னங்குடிப்பட்டியில் மலையாண்டி எனும் ஊர்தெய்வத்தை மக்கள் வழிபடுகின்றனர். மலையாண்டி கோவில் குன்னங்குடிப்பட்டி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்தக்கோவில் அமைந்துள்ள மலை மிகவும் பிரசித்தி பெற்றதாகப் பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை தீபத்தன்று திருவண்ணாமலை தீபம் ஏற்றிய பின்னர் இந்த மலையில் தீபம் ஏற்றப்படும்.அதற்குப் பின்னரே சுற்றியுள்ள ஊர்களில் மக்கள் தங்கள் வீடுகளில் தீபம் எற்றுவர். மலையாண்டி கோவிலின் சிறப்பே அக்கோவிலில் வளர்க்கப்படும் கோவில்காளை தான். பெரும்பாலும் எண்ணற்ற கிராமக்கோவில்களில் அந்தந்தக் கோவிலுக்கென்றே காளைகள் வளர்க்கப்படுகின்றன. அவைகளை ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு அனுப்புவதும் வழக்கமாக உள்ளது. மலையாண்டிக் கோவிலில் மஞ்சள்,குங்குமம் மற்றும் மலர் மாலை சாற்றி வழிபடுவர். திருவிழா சமயத்தில் கோவில் காளை அவிழ்த்துவிடப்பட்டு மஞ்சுவிரட்டு நடைபெறும் வழக்கம் இவ்வூரில் காணப்படுகின்றது.

கோவில் காளையை ஊர்மக்கள் அனைவரும் சேர்ந்து வளர்ப்பர். மரியாதையும் கொடுப்பர். மலையாண்டி கோவில் காளையைக் கட்டுபடுத்தும் வீரருக்கு மரியாதையை செலுத்துவர்.

ஸ்ரீ மணிகட்டி அய்யனார்

கருங்காலக்குடியை அடுத்த திருச்சுனையில் ஸ்ரீ மணிகட்டி அய்யனார் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலின் சிறப்பு இங்கு காணிக்கையாக சாற்றப்படும் குதிரைகளாகும். குதிரை பொம்மைகளைத் தயார் செய்து, தன் வேண்டுதல் நிறைவேற வேண்டி ஆரவாரத்தோடு தூக்கிவந்துக் கோவிலில் சாற்றுவர். இவ்வாறு வேண்டுதல் நிறைவேறிய பின்னரும் செய்வதுண்டு. அதே ஊரில் சோனையன் , கருப்புச்சாமி போன்ற தெய்வங்களையும் மக்கள் வழிபடுகின்றனர்.

இங்குள்ள கருப்புச்சாமி கோவிலில் பெண்களுக்கு அனுமதி இல்லை. உருவ வழிபாடு இல்லாத தெய்வ வழிபாடு கிராமங்களில் அதிகம். கருப்பு கோவிலில் அரிவாள் வைத்து வணங்கும் வழக்கம் உள்ளது. பூ, பழம் கொண்டு வழிபடுகின்றனர். இருப்பினும் இன்றளவும் பெண்களுக்கு அனுமதி இல்லாதது ஏன் எனும் கேள்விக்கு எவரிடமும் பதில் இல்லை.

கோவில் கண்மாய்கள்

சிறுதெய்வங்கள் பெரும்பாலும் வயல்களின் நடுவில், மலையடிவாரத்தில், கண்மாய் அருகில் வைத்து வழிபடப்படுவது வழக்கமாய் உள்ளது. இதன் காரணம் இயற்கையைக் காப்பதாகும். இறைவன்மீது கொண்ட அச்சத்தால் அவைகளை மனிதன் நெருங்கமாட்டான் என்பதற்காக இவ்வாறு அமைத்திருக்கலாம் என்கின்றனர் ஊர்ப்பெரியவர்கள். வேண்டுதலுக்காக வேல்,சூலம் போன்றவற்றைக் காணிக்கையாக வழங்கி, சில காலம் கழிந்து அவற்றைக் கோவில் கண்மாயில் விட்டுவிடுவதாகவும் கூறுகின்றனர். இத்தகைய வழிபாடுகள் இப்பகுதி மக்களிடையே காணப்படுகின்றன.

முடிவுரை

கருங்காலக்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் வழிபடும் சிறுதெய்வங்களும் வழிபடும் முறைகளும் இவ்வாய்வுக்கட்டுரையில் களஆய்வின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

துணைநூற் பட்டியல்

1 .நாட்டுப்புறவியல் மரபுகள் – ஓ.முத்தையா

2. நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள் - தே. லூர்து

கள ஆய்வுப் பகுதிகள் (மதுரை மாவட்டம், மேலூர் வட்டம்)

கருங்காலக்குடி

திருச்சுனை

குன்னங்குடிப்பட்டி